வேதாரண்யம் நகராட்சியின் 2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை திரு மா.மீ.புகழேந்தி,

| | | |
|---|---|---|
| பொருள் எண்;.1 | நாகப்பட்டினம் மாவட்டம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் கடித எண்: 1704/MRA/2024, நாள்:25.06.2025–இல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி ஆய்வுக் கூட்ட அறிவுரையின் படி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், உரிமைகள் திட்ட அலுவலர், மாவட்ட துனை பயிற்சி மருத்துவ அலுவலர் ஆகியோர் கூட்டாய்வு மேற்கொண்ட போது அகஸ்தியம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள சமுதாய கூடத்தை ஓரிட சேவை மையமாக பயன்படுத்திக்கொள்ள தீர்மானிக்கப்பட்டு 2025–2026 நடப்பாண்டில் ஓரிட சேவை மையம் மாற்றுத்திறனாளிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை OSC பயன்பாட்டிற்கு அனுமதித்து தடையில்லாச் சான்று வழங்கிட கேட்டுகொள்ளப்பட்டது. மேற்படி கோரிக்கையினை ஏற்று அகஸ்தியம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள சமுதாய கூடத்தை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் 2025–2026 நடப்பாண்டில் ஒருங்கிணைந்த ஓரிட சேவை மையமாக பயன்படுத்திக்கொள்ள நிபந்தனைக்குட்பட்டு அனுமதித்து தடையில்லாச் சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2504/2024/எப்1 | **தீர்மான எண்.123 : அனுமதி வழங்கப்பட்டது** |
| பொருள் எண்;.2 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 37(1) (i–a)ன்படி மாற்றுத் திறனாளியை மன்ற உறுப்பினராக நியமனம் செய்வதற்கான அறிவிப்பினை தினசரி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நாளிதழ்களில் விளம்பரம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13933/2022/எம்ஏ2 நாள்.30.06.2025ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.27073/ஐ கீழ்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. The Daily Thanthi – ரூ.7963/–<br>2. Kal Publications (P) Ltd – ரூ.3360/–<br>3. Trinity Mirror – ரூ.15750/–<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1322/2025/சி1 | **தீர்மான எண்.124 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்;.3 | வேதாரண்யம் நகராட்சி 2025–26ம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாண்டு குத்தகை இனமான நாகை ரஸ்தா கார் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கு பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.06.2023, 18.07.2023. 16.02.2024, 05.03.2024. 18.07.2024, | **தீர்மான எண்.125 : அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | 17.10.2024. 16.01.2025. 11.03.2025,15.5.2025 ஆகிய தினங்களில் பொது ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை அதன் காரணமாக மேற்படி இனத்தில் துறை சார்ந்த வசூல் பணிபார்க்கப்பட்டது. கடைசியாக03..07.2025 அன்று பொது ஏலம் கோரப்பட்டதில் திரு.மனோஜ் த/பெ மாரியப்பன் என்பவர் உயர்ந்தபட்ச ஏல கேள்வி தொகை ரூ.10200/-க்கு உரிமம் கோரியுள்ளார். மேற்படி, இனத்திற்கு துறை சார்ந்த வசூல் பணியில் ஈடுபடும் பணியாளரின் மாத ஊதியம், கட்டண ரசீதுகள் பிரிண்டிங் மற்றும் இதர செலவினங்கள், ஏல உரிமை தொகையைவிட கூடுதலாக செலவிடபடுவதால், 03.07.2025ல் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏல உரிமை தொகையினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண்.201/2025/அ2 | |
| பொருள் எண்;.4 | நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந. க. எண். 23333/2019 ஊ2 நாள்.23.01.2020 ல் தமிழ்நாடு நகர் புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி கோட்டம் மூலம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3,18,20 மற்றும் புல எண். 90/2, 90/3,202/2 உள்ளிட்ட புல எண்களில் அமைந்துள்ள இடத்தில் பாரத பிரதமரின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்ட 2020 ஆம் ஆண்டு நிலம் ஒதுக்கப்பட்டு முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டது மேற்படி முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட இடத்தில் 01.04.2021 முதல் இந்நகராட்சியால் காலி மனை வரிவிதிப்பு செய்யப்பட்டது. (வரிவிதிப்பு எண்கள் 100/003/900899, 100/018/900551, 100/020/900538, 100/020/900539)மேற்படி வரிவிதிப்பிற்கு 2021 முதல் 2025 வரை வரித்தொகை ரூ.1230069- செலுத்த வேண்டியுள்ளது மேற்படி தொகையினை செலுத்து கோரி இவ்வலுவலக கடிதம் ந. க. எண். 843/2024 A1. மூலம் தெரியப்படுத்தியும் இது நாள் வரை தொகை செலுத்தாமல் உள்ளனர்<br>தற்சமயம் நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு நகர் புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் திருச்சி அவர்களின் கடிதம் எண்.1774-4/ ஊ. போ( திட்டம்)2023 நாள்.04.06.2025 ல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்ட இடத்தில் மூன்று மாத காலத்திற்குள் கட்டிட பணிகள் துவங்கப்பட வேண்டும் இல்லை எனில் இடத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் புல எண்களில் வார்டு எண்.20ல்,100/020/900538, 100/020/900539 வரிவிதிப்பு உள்ள காலி மனைகளில் நகர்புற வாழ்விட மேம்பாட்டு துறையினரால் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படவில்லை இதனால் மேற்படி நிலம் அரசால் மீண்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி இடத்திற்கு நகராட்சியால் விதிக்கப்பட்டுள்ள காலி மனை வரித்தொகையினை செலுத்த இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி இடத்தினை இந்நகராட்சி வருவாய் ஆய்வரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது அதில் மேற்கண்ட இடங்களில் கட்டுமான பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது எனவே மேற்காணும் வரிவிதிப்புகளில் நிலுவைத்தொகை கீழ்கண்ட விவரப்படி உள்ளது. அதன் விவரம் | **தீர்மான எண்.126 : அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண். | வரிவிதிப்பு எண். | காலம் | தொகை ரூ. |
|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>100/020/900538</td><td>2021-2022 முதல் 2025-2026 வரை</td><td>85334.00</td></tr>
<tr><td>2.</td><td>100/020/900539</td><td>2021-2022 முதல் 2025-2026 வரை</td><td>108983.00</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>194317.00</td></tr>
</table>
மேற்கண்ட வரிவிதிப்பிற்கான நிலுவை மற்றும் நடப்பு தொகை ரூபாய். 194317/- வசூல் செய்திட வழிவகை ஏதும் இல்லை என்பதால் மேற்படி தொகையினை கணினி கேட்பில் இருந்து நீக்கம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.843/2024/அ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்;.5</td>
<td>
நகராட்சி நிர்வாக இயக்குநர்,அவர்களின் கடிதம் ந.க.எண். 2489/2025/டிபி1. நாள். 29.05.2025-இல் அரசாணை (நிலை) எண்.1531 .ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.03.10.1978-இன்படி தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலும் உள்ள குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள் ஆகியவற்றில் உள்ள சாதி அடிப்டையிலான பெயர்களை நீக்கம் செய்ய வேண்டும் என்று அரசு உத்திரவிடப்பட்டுள்ளது என்றும் இதனை தொடர்ந்து (காலனி) என்ற சொல் இந்த மண்ணின் ஆதிகுடிமக்களை அவமதிப்பதற்கு ஒரு பொருளாக மாறியுள்ளது என்றும் இந்த வார்த்தை ஒழுங்கு முறையின் அடையாளமாகவும் தீண்டாமைக்கான குறியீடாகவும், குறிப்பாக தலித்துகள் வசிக்கும் குடியிருப்புகளை விவரிக்கப் பயன்படுத்தும் போது அவமானமாகவும் மாறிவிட்டதால் (காலனி) என்ற வார்த்தையை அதிகாரப்பூர்வ ஆவணத்திலிருந்தும் பொதுப் பயன்பாட்டிலிருந்தும் நீக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் நோக்கில்,<br><br>
நகராட்சி நிர்வாக இயக்குநர் , அவர்களின் கடிதம் ந.க.எண் 2489/2025/டிபி1 நாள் .29.05.2025 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 1330/2023/அ4 நாள்.04.06,2025 ம் தேதிய கடித்தில் தெரிவித்துள்ள படி அனைத்து இடங்களிலும் உள்ள சாதி அடிப்படையிலான மற்றும் காலனி ஆகியவற்றிக்கு பெயர் மாற்றம் செய்திட சம்பந்தப்பட்ட வார்டுகளில் பகுதி சபா (Area Shaba) கூட்டம் நடத்தப்பட்டு மேற்படி பகுதி பொது மக்களின் கருத்தினை கேட்டு, தீர்மானம் நிறைவேற்றி கீழ்கண்ட படி புதிய தெரு பெயர்கள், தேர்வு செய்யப்பட்டதை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது
</td>
<td>தீர்மான எண்.127 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண் | வார்டு எண் | பகுதி எண் | தற்போது உள்ள சாலை/தெருவின் பெயர் | பகுதி சபா தீர்மான எண் மற்றும் நாள் | பெயர் மாற்றம் செய்ய அரசுக்கு பரிந்துரை செய்ய பகுதி சபாவின் தீர்மானம் நிறைவேற்றிய தெரு/ சாலையின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | 4 / 1 | மேலத்தெரு எம்.ஜி,ஆர் மீனவர் காலனி | 1/14.07.2025 | மேலத்தெரு எம்.ஜி,ஆர் நகர் |
| 2 | 9 | 9 / 1 | வெட்டிய காடு | 1/14.07.2025 | காந்தி நகர் |
| 3 | 10 | 10 / 2 | வண்ணார தெரு | 1/14.07.2025 | கலைஞர் கருணாநிதி சாலை |

அலுவலக குறிப்பு : 1. பகுதி சபா கூட்டதின் தீர்மானத்தை மன்றம் அனுமதிக்கலாம்.
2, மேற்கண்டவாறு பெயர் மாற்றம் செய்ய பகுதி சபாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1245/2025/எப்1

**பொருள் எண்;.6**

வேதாரண்யம் நகராட்சி சன்னதி ரஸ்தாவில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையின் பராமரிப்பு பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. எனவே, நவீன எரிவாயு தகன மேடையினை இயக்குதல் மற்றும் பராமரிக்க முன் அனுபவம் உள்ள தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்று இயக்குதல் மற்றும் பராமரிப்பு (Operating and Maintenance) மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ள 07.07.2025 அன்று தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டதில் வேதாரண்யம் நம்பர்45, மூன்றாம் தெருவில் இயங்கி வரும் ஈகா தொண்டு நிறுவனத்திடமிருந்து மட்டும் 20.07.2025 அன்று விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் நவீன எரிவாயு தகன மேடையினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1376/2025/எச்1

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.128 : அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்;.7**

நகராட்சி பொதுநிதி **2025-2026** ன்கீழ் பூங்காக்களை தினசரி தூய்மை பணி செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளில் தூய்மை பணி மேற்கொள்ளும் பணிக்கு தேவையான பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள **30.06.2025**அன்று E-Tender மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | M/s உதயம் கான்ட்ராக்டர், | M/s சன் கான்ட்ராக்டர், |
|---|---|---|---|

**தீர்மான எண்.129 : அங்கீகரிக்கப்பட்டது**

| | | வேதாரண்யம் நபர் ஒன்றுக்கு | வேதாரண்யம் நபர் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1. | பூங்கா காவலர் | **565.00** | **575.00** |
| 2. | தூய்மை பணியாளர் | **565.00** | **580.00** |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தவிகிதம் வழங்கியுள்ள M/s உதயம் கான்ட்ராக்டர், வேதாரண்யம் ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க. எண். 893/2025/எச்1)

பொருள் எண்;.8

வேதாரண்யம் நகராட்சி நவீன எரிவாயு தகனமேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு (Operating and Maintanance) மேற்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இது தொடர்பான Expensive of Interest அறிவிப்பு விளம்பரம் 08.07.2025 அன்றைய நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விளம்பர கட்டணம் செலுத்தக்கோரி கீழ்க்கண்டவாறு நிறுவனத்திடம் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பர நிறுவன பெயர் | விளம்பர கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. | தினமணி | Express Publication (Madurai) Private Limited, Trichy. | 1352/- |

நகராட்சி பொதுநிதி 2025-26-ன் கீழ் மேற்கண்ட விளம்பர கட்டணத்தை தொடர்புடைய நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1376/2025/எச்1

**தீர்மான எண்.130 : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்;.9

வேதாரண்யம் நகராட்சி கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் 2024(திருத்தப்பட்டது) நடைமுறைப்படுத்துதல் தொடர்பான அறிவிப்பு விளம்பரம் 26.06.2025 அன்றைய நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விளம்பர கட்டணம் செலுத்தக்கோரி கீழ்க்கண்டவாறு நிறுவனத்திடம் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | விளம்பர நிறுவன பெயர் | விளம்பர கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. | தினகரன் | Kal Publication Private Limited, Trichy. | 3,360/- |

நகராட்சி பொதுநிதி 2025-26-ன் கீழ் மேற்கண்ட விளம்பர கட்டணத்தை தொடர்புடைய நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.131 : அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr><td></td><td>ந.க.எண். 1194/2025/எச்1</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்;.10</td><td>வேதாரண்யம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தநிலையில் அப்பணிக்கு தேவையான கணக்கெடுப்பு படிவம் அச்சடிக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/−க்கு நகர்மன்ற தீர்மான எண் 78 நாள் 05.05.2025 அன்று அனுமதி வழங்கப்பட்டது டெங்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Mayiladuthurai District Printing Service and Allied Industries Indi. Co−op Society Ltd மூலம் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. டெங்கு பணியின் அவசரம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.829/2025/எச்1</td><td>தீர்மான எண்.132 : அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்;.11</td><td>துணைஇயக்குநர், சுகாதாரப்பணிகள், நாகப்பட்டினம் அவர்களது நேர்முககடிதம் ந.க.எண்.1313/அ5 2023 நாள்.02.08.2023-ல் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் நகராட்சிபகுதியில் 24 டெங்கு களப்பணியாளர்கள் டெங்கு நோய்த்தடுப்பு பணிக்கு அமர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைதொடர்ந்து26.12.2024 அன்றுE-Tender மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தகுதிவாய்ந்த ஒப்பந்தநிறுவனமான ‘‘சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’என்ற நிறுவனத்திற்கு ஜனவரி-2025 முதல் ஏப்ரல்-2025 முடிய டெங்குபுழு ஒழிப்பு பணிமேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.9/ நாள்.30.01.2025-ன்படி 06.01.2025 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. ஒப்பந்தக்காலம் ஏப்ரல்-2025 மாதத்துடன் முடிவடைந்ததால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள காலஅவகாசம் தேவைப்படுவதாலும் டெங்குதடுப்பு பணிகள் அத்தியாவசித்தை கருத்தில் கொண்டுமேற்படி ‘‘சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’என்ற நிறுவனத்திற்கு 06.01.2025 அன்று வழங்கப்பட்ட உத்தரவினை ஆகஸ்ட்-2025ம் மாதம் முதல் மேலும் மூன்று மாதகாலத்திற்கு நீட்டித்து வழங்கிடவும், அப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.14.00 லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) 06.01.2025 அன்று வழங்கிய வேலைஉத்தரவினை மூன்று மாதங்கள் நீட்டிக்கமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மேற்படி டெங்குதடுப்பு பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.14.00 இலட்சத்தினை பொதுநிதியலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1441/2023 எச்.1)</td><td>தீர்மான எண்.133 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்</td><td>வேதாரண்யம் நகராட்சியில் பொதுசுகாதார வாகனம் எண். TN-51J-1570-க்கு 2025-ம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு பணி ரூ.35,000/-ம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 11.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<table><tr><th>வ.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr></table></td><td>தீர்மான எண்.134 : அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

எண்.12

| எ. | | தொகை ரூ. | துருவன் மோட்டார்ஸ் நந்தவனக்குளத்தெரு வேதாரண்யம் | செங்குட்டுவன் தம்புசாமி 4/169செட்டியார்குத்தகை ஆயக்காரன்புலம் ,2 |
|---|---|---|---|---|
| 1 | பொதுசுகாதார பிரிவில் உள்ள வாகனம் எண். TN-51J-1570-ற்கான ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 35,000 | 34,800 | 35,300 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் துருவன் மோட்டார்ஸ் நந்தவனக்குளத்தெரு வேதாரண்யம் என்பவரது ஒப்பந்த விலை விகிதம் குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அவருக்கு வேலை உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.788/2025 எச்.1)

<table>
<tr>
<td>பொருள் எண்.13</td>
<td>வேதாரண்யம் நகராட்சியில் பொதுசுகாதார வாகனம் எண். TN-51AD-6589-க்கு 2025-ம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு பணி ரூ.50,000/-ம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 11.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><th rowspan="2">வ. எ.</th><th rowspan="2">பணியின் பெயர்</th><th rowspan="2">மதிப்பீட்டுத் தொகை ரூ.</th><th colspan="2">ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><th>துருவன் மோட்டார்ஸ் நந்தவனக்குளத் தெரு வேதாரண்யம்</th><th>செங்குட்டுவன் தம்புசாமி ஆயக்காரன்புலம் ,2 வேதாரன்யம்</th></tr>
<tr><td>1</td><td>பொதுசுகாதார பிரிவில் உள்ள வாகனம் எண். TN-51AD-6589-ற்கான ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td><td>50,000</td><td>49,800</td><td>51,500</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் துருவன் மோட்டார்ஸ் நந்தவனக்குளத்தெரு வேதாரண்யம் என்பவரது ஒப்பந்த விலை விகிதம் குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அவருக்கு வேலை உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.789/2025 எச்.1)</td>
<td>தீர்மான எண்.135 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.14</td>
<td>வேதாரண்யம் நகராட்சி பகுதியில் 24.07.2025 அன்று ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு வேதாரண்யம் சன்னதி கடற்கரையில் புனித நீராட வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதி பணிகளான குடிநீர் வசதி மற்றும் தற்காலிக உடை மாற்றும் அறைகள் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிய அலுவலக நடவடிக்கைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிய அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க. எண். 1571/2025/H1)</td>
<td>தீர்மான எண்.136 : அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.15</td>
<td>வேதாரண்யம் நகராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின் “முகாம் நடைபெறும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, இருக்கை வசதி, மின்சார வசதி, போதிய கணினிகள்</td>
<td>தீர்மான எண்.137 : அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

மற்றும் உரிய இணைய சேவை வசதி ஏற்பாடு செய்தல், மேலும் ஆட்டோ விளம்பர செய்தல் , துண்டு பிரசுரங்கள் அச்சடித்தல் மற்றும் விளம்பர பதாகைகள் வைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள 30.06.2025 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ. எ.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** | **விலைப்புள்ளி தொகை ரூபாயில்** |
|---|---|---|---|
| 1 | திரு. த.காளிமுத்து,<br>கைலவனம்பேட்டை,<br>வேதாரண்யம் | 5,00,000 | 4,98,000 |
| 2 | திருமதி. எஸ்.வள்ளி,<br>குட்டாட்சிகாடு<br>அகஸ்தியம்பள்ளி | | 4,98,500 |
| 3 | திரு.த.செங்குட்டுவன்,<br>ஆய்ககாரன்புலம். | | 4,99,500 |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-1 ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு. த.காளிமுத்து, கைலவனம்பேட்டை, வேதாரண்யம் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக வழங்கிய விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 1286/25/இ1)**

பொருள் எண்.16

**தீர்மான எண்.138 : ஒப்புதல் வழங்கப்பட்டது**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்– 9732/2025/ SS2 02.05.2025 ம் தேதிய கடிதத்தில் SFC – 2025–2026 பள்ளி மேம்பாட்டு மான்யம் மூலதனநிதியில் கீழ் காணும் அங்கன்வாடி மையத்தின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | SFC – 2025–2026 பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதனநிதி | மதிப்பீட்டுத் தொகை ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|
| **1.** | Reconstruction of Anganwadi (ICDS) Center at **Ward no 05 Panaiyan Kadu** in Vedaranyam Municipality. | 19.00 |

இந்நிலையில், இந்நகர்மன்ற தீர்மான எண் – 100 நாள் –30.05.2025 படி மேற்கண்டவாறு SFC

| | | |
|---|---|---|
| | – 2025–2026 பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதன நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ள பணிக்கு பதிலாக புதியதாக அங்கன்வாடி மையம் அமைக்க அவசியமாக தேவைப்படும் வார்டு எண்.21 மணியன்தீவு பகுதிக்கு மாற்றம் செய்துதர வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் அனுமதி கோரி கடிதம் அனுப்பட்டது.<br>நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்– 9732/2025/ மா,தி 2 நாள்– 19.07.2025 ம் தேதிய கடிதத்தில் மேற்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட புதிய அங்கன்வாடி மையம் அமைக்கப்பட உள்ள பனையன்காடு இடத்திற்கு பதிலாக வார்டு எண் – 21 மணியன் தீவு பகுதியில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்க பின்வருமாறு திருந்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது .<br><table><tr><td>வ.எண்</td><td>SFC – 2025–2026 பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதனநிதி</td><td>மதிப்பீட்டுத் தொகை ரூ.(இலட்சத்தில்)</td></tr><tr><td>**1.**</td><td>Reconstruction of Anganwadi (ICDS) Center at **Ward no 21 Maniyantheevu** in Vedaranyam Municipality.</td><td>19.00</td></tr></table>மேற்காணும் அலுவலக நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .<br>அலுவலக குறிப்பு : **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு ஏற்கனவே, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள வார்டு எண் – 05 பனையன்காடு பகுதியில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்கும் பணிக்கு வழங்கப்பட்டுள்ள ,வேலை உத்தரவினை ரத்து செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம் .<br>(ந.க.எண். **971/2025/இ1)** | |
| பொருள் எண்.17 | வேதாரண்யம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்விளக்குகள் மற்றும் மின் சாதனங்கள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரிசெய்ய தேவையான மின்சாதன பொருட்கள் வாங்கப்பட்டு பழுதுகள் சரிசெய்யப்பட்டுள்ளது. பணியின் அவசர,அவசியம் கருதி, மேற்கொள்ளப்பட்டுள்ள பணிக்கான செலவினத் தொகை ரூ.2,255/–ஐ இந்நகராட்சி மின்பணியாளர் திரு.எஸ்.ஞானச்செல்வம் என்பவரால் வழங்கப்பட்டு பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ள்ளது. எனவே, மேற்காணும் செலவினத் தொகையினை திரு.எஸ். ஞானச்செல்வம் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண். 1424/2025/இ1 | **தீர்மான எண்.139 : அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.18 | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வார்டு பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் 35 எண்ணிக்கையில் அமைந்துள்ளது. அதில் 33 சிறுமின்விசை பம்பு மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் தேக்க தொட்டியும் அமைந்துள்ளது, | **தீர்மான எண்.140 : அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மேற்படி, உள்ளூர் நீர் ஆதாரமான நீர்தேக்க தொட்டிகளை இயக்குவதற்க போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நீர் தேக்க தொட்டிகளின் அருகில் உள்ள பொதுமக்கள் மூலம் இயக்கப்பட்ட வருகிறது.<br>மேலும், கூடுதலாக அண்டர்காடு உள்ளூர் கிணறு மூலம் கைலவனம்பேட்டை, வேம்பதேவன்காடு சுற்றுபகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உள்ளூர் கிணறு இயக்குபவருக்கு 2நபருக்கு மாதம் ரூ750/ வீதம் 6 மாதத்திற்கு ரூ.9,000/– சிறுமின்விசை பம்பிற்கு நபர் ஒன்றுக்கு ரூ.250/– வீதமும், 33 நபர்களுக்கு ரூ.8,250 வீதம் ஆறு மாதங்களுக்கு ரூ.49500/–, மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு ஒரு நபருக்கு மாதம் ரூ.1000/– வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6000/– வீதமும், ஜூலை –2025 முதல் டிசம்பர் –2025 வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ.65000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:_ 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2235/2021/இ2 | |
| பொருள் எண்.19 | வேதாரண்யம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீருக்கு 1KL ரூ.16.80 பைசாவிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை அவர்களின் 28.05.2025 நாளிட்ட கடிதத்தில் 2025–2026ம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மூலம் வழங்கப்படும் குடிநீருக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 01.04.2025 முதல் 1 கிலோ லிட்டருக்கு ரூ.17.64ஆக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, 1 கிலோ லிட்டருக்கு லிட்டருக்கு ரூ.17.64 கட்டணமாக உயர்த்தப்பட்ட விலை விகிதத்தின்படி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கும், குடிநீரின் அவசர, அவசியம் கருதி ஏப்ரல் மற்றும் மேமாதத்திற்கு உயர்த்தப்பட்ட விலை விகிதத்தில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொகை வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்கான தொகை வழங்கியதிதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.717/2012/இ2 | **தீர்மான எண்.141 : அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள் எண்.20 | வேதாரண்யம் நகராட்சியில் **15**வது மத்திய நிதிக்குழு மானியம் (Tied Grant) **2025-2026** மற்றும் அயோத்திதாசர் பண்டிதர் குடியிப்புகள் மேம்பாட்டுத்திட்டம் **2024-25**-ன் கீழ் பணி மேற்கொள்வது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் **02.07.2025** அன்றைய நாளிதழில் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது**.** இவற்றிற்கான விளம்பரக்கட்டணம் செலுத்திடக்கோரி கீழ்கண்டவாறு நிறுவனத்திடமிருந்து விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது**.** | **தீர்மான எண்.142 : அனுமதிக்கப்பட்டது** |

| **வ.எ** | **நாளிதழ் பெயர்** | **விளம்பர நிறுவன விவரம்** | **விளம்பரக் கட்டணம் ரூ.** |
|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>.</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1.</td><td>Financial Express</td><td rowspan="2">M/S Moulis Advertising Service private ltd., Chennai-14</td><td>2,550/-</td></tr>
<tr><td>2.</td><td>Thinaboomi</td><td>15,400/-</td></tr>
<tr><td colspan="3">Total ( GST 5% =448.75+448.75)</td><td>18,848/-</td></tr>
</table>
நகராட்சி பொதுநிதி 2025-26ன்கீழ் மேற்கண்ட விளம்பரக்கட்டணத்தை தொடர்புடைய நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க. எண். 1490/25/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.21</td>
<td>
வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்–10 மேலே வீதியில் உள்ள Mini– High Mass விளக்கு மற்றும் வார்டு எண். 3 வட்டாட்சியர் அலுவலகம் அருகில் உள்ள Mini– High Mass விளக்கு பழுதடைந்துள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் பாதிப்படுகின்றனர், எனவே, நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்காணும் பகுதியில் உள்ள Mini– High Mass –ல் 100 வாட்ஸ் LED – ஃபோக்கஸ் லைட். 7–எண்ணிக்கை புதிதாக மாற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.14,000/–க்கும், பணியின் அவசர, அவசியம் கருதி, மேற்காணும் புதிய LED ஃபோக்கஸ் லைட்களை இந்நகராட்சி மின்பணியாளர் திரு.எஸ்.ஞானச்செல்வம் அவர்கள் மூலம் கொள்முதல் செய்யவும் , அதற்கான செலவினத் தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மேற்காணும் செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண். 1424/2025/இ1
</td>
<td>தீர்மான எண்.143 : அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ஒம்/–
மா.மீ.புகழேந்தி
நகர்மன்றத் தலைவர்